

வேலூர் மாவட்டம் காட்பாடி காந்தி நகரில் கூட்டுறவு வீட்டு வசதி நகரமைப்பு சங்கம் வணிக நோக்கிலான கட்டிடத்தை நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., காந்திநகர் பகுதி செயலாளர் பரமசிவம், கூட்டுறவு சங்க நகரமைப்பு தலைவர் தேவசுந்தரம், செயலாளர் மனோகரன், வட்டச் செயலாளர் கெஜா, ஜே. சி. பி.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கலைமாமணி, பொது மற்றும் குடும்பநல மருத்துவர் எஸ். அமுதகுமார் எழுதிய 'நல்ல உணவு, நலமான வாழ்வு' என்னும் மருத்துவ நூலை, தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் வெளியிட, பத்மபூஷன் தொழிலதிபர் நல்லி குப்புசாமி, ஏ.எம்.எஸ். கல்வி நிறுவனங்களின் தலைவர் முகமது சாலிஹ் ஆகியோர் பெற்றுக் கொண்டு வாழ்த்தினர். உடன் நூலாசிரியர் எஸ். அமுதகுமார் உள்ளார்.

### நெல்லை மாவட்டம்

# இராதாபுரத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆய்வு!

நெல்லை, ஜுலை 25- நெல்லை மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம்,இராதாபுரம் பகுதிகளுக்கு மணியம்மை மஹாலில் 23.07.2025 அன்று நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஊராட்சித்தலைவர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் முன்னிலையில் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்த தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் அரசின் திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டு மென பல்வேறு சீர்மிகு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய மக்க ளின் வசதிக்கேற்ப அவர்க ளின் பகுதிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் குறைகளையும், கோரிக்கை மனுக்களையும் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான பொதுமக்களி டையே விண்ணப்பங்கள் பெறப்பட்டு 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம் மூலம் சேவைகள் கிடைப்பதற்கு, திரு நெல்வேலி மாவட்டத்தில் 255 முகாம்கள் நடத்திடுவதற்கு திட்டமிடப்பட்டு அனைத் துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் 07.10.2025 வரை இம்முகாம்கள் நடை பெறவுள்ளது.

இன்றையதினம் பாளைங் கோட்டை வார்டு எண்.5 மற்றும் 6 பகுதி களுக்கு ரஹ்மத் நகர் எல்.எஸ்.மஹாலிலும், களக்காடு வார்டு எண்.3,4, மற்றும் 5 பகுதிகளுக்கு களக்காடு கருவேலன் குளம், இராஜம் திருமண மண்டபத்திலும், மேல செவல் வார்டு எண்.18 மேலச்செவல் பேரூராட்சி சமுதாய க்கூடத்திலும், இராதாபுரம் பகுதிகளுக்கு இராதாபுரம் மணியம்மை மஹாலிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

இம்முகாம்களில் உடனடியாக தீர்வு காணும் வகையில் குடும்ப அட்டை களில் பெயர் மாற்றம் செய்தல்,பெயர் சேர்த்தல், மின்விநியோகம் பெயர் மாற்றம் போன்ற உடனடியாக தீர்வு காணும் மனுக்களுக்கு முகாம் நடைபெறும் இடத்திலேயே தீர்வு வழங்கப்பட்டு பலர் சேவை கள் பெற்று வருகின்றனர்.மேலும் முகாமில் தீர்வு கிடைக்காத மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காணப் படும்.

கடந்த 15.07.2025 முதல் 22.07.2025 வரை 5 நாட்கள் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் 9053 கோரிக்கை மனுக்கள் பெறப்பட் டுள்ளது.

தொடர்ந்து நேற்று (24.07. 2025) மேலப்பாளை யம் மண்டலம் வார்டு எண்.31, 45 மற்றும் 46 பகுதிகளுக்கு மேலப் பாளையம் எம்.எல்.எம்.நகர் முஸ்லீம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், மூலக்கரைப்பட்டி வார்டு எண்.18 பகுதிகளுக்கு மூலக்கரைப்பட்டி வெங்க டேஸ்வரா திருமண மண்ட பத்திலும்,களக்காடு ஊராட்சி ஒன்றியம் தேவ நல்லூர், கள்ளிகுளம் பகுதி களுக்கு தேவநல்லூர் சமுதாய நலக்கூடத்திலும், மானூர் ஊராட்சி ஒன்றியம் வன்னிக் கோனந்தல் பகுதிகளுக்கு வன்னிக்கோ னேந்தல் சமுதாய நலக் கூடத்திலும், பாளையங் கோட்டை மண்டலம் சீவலப் பேரி, கன்சாபுரம் பகுதிகளுக்கு சீவலப்பேரி சமுதாய நலக்கூடத்திலும்,வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் செட்டிகுளம் பகுதிகளுக்கு பெருமணல் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் தங்களது கோரிக்கை களுக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து, சேவைகளை பெற்று பயனடையு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து நெல்லை மாவட்டம், மேலச்செவல் வார்டு எண் 18 பகுதிகளுக்கு மேலச்செவல் பேரூராட்சி சமுதாய நலக்கூடத்தில் இன்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், தொடங்கி வைத்து பார்வையிட்டார். முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு விரைந்து தீர்வு காண துறை சார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.

நிகழ்வில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர்,இராதாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் பொன் மீனாட்சி அரவிந்தன்,அறங்காவலர் குழு உறுப்பினர் சமுகை முரளி வட்டாட்சியர் மாரிசெல்வம் ,வட்டார வளர்ச்சி அலுவலர் அலெக்ஸ் சாமுவேல் உட்பட துறைசார்ந்த அலு வலர்கள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஒரு தொகுதியில் 23 ஆயிரம் பேர் என

# பீகாரில் 56 லட்சம் வாக்காளர்களை நீக்கிய தேர்தல் ஆணையம்!

## எதிர்க்கட்சிகள் கடும் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 25-

பீகாரில் ஒரு தொகுதிக்கு 23 ஆயிரம் வாக்காளர்கள் வீதம் மொத்தம் 56 லட்சம் வாக்காளர்களை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சிகள் ஒன்றிய பா.ஜ.க. அரசு மீதும், தேர்தல் ஆணையம் மீதும் கடும் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளனர். பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் தீவிர சிறப்பு வாக்காளர் திருத்த பட்டியலை தேர்தல் ஆணையம் தயாரித்து வருகிறது. இந்த சிறப்பு தீவிர திருத்தம் 2003ஆம் ஆண்டுக்கு பிறகு வாக்காளர் பட்டியலில் இணைந்தவர்களுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. 2003ஆம் ஆண்டுக்குபிறகு வாக்காளர் பட்டியலில் இணைந்தவர்கள் தங்கள் ஆவணத்தை வழங்க இன்று கடைசி நாளாகும்.

இந்நிலையில், தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள 20 லட்சம் பேர் இறந்துள்ளனர். 28 லட்சம் பேர் வேறு மாநிலங்களில் உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ளதால், அவர்கள் பீகாரில் வாக்களிக்கத் தகுதியற்றவர்கள். மேலும் ஏழு லட்சம் பேர் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்துள்ளனர்.

**பீகாரில் பெரும் சர்ச்சை!**

தற்போதைய பட்டியலில் கூடுதலாக ஒரு லட்சம் பேரை தொடர்பு கொள்ள முடியவில்லை. மேலும் 15 லட்சம் வாக்காளர்கள் சரிபார்ப்பு படிவங்களை திருப்பி அனுப்பவில்லை. இந்த கணக்கீட்டின்படி, பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து சுமார் 56 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பீகார் வாக்காளர் இறுதிப் பட்டியல் செப்டம்பர் 30 ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. பீகார் மாநிலத்தில் 243 சட்டப்பேரவை தொகுதிகள் உள்ளன. வாக்காளர் பட்டியலில் இருந்து தற்போதைய நிலவரப்படி, 56 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டால், ஒரு தொகுதிக்கு சராசரியாக 23,045 வாக்காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

**56 லட்சம் பேரை நீக்குவது ஏற்றுக்கொள்ள முடியாது!**

பீகார் மாநிலத்தில் கடந்த 10 முக்கிய தேர்தல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து, அதாவது தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் இருந்து 56 லட்சம் பேரை நீக்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கி உள்ளன. ஏனெனில் 2020 தேர்தலில் எதிர்க்கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளம் 52 இடங்களை 5,000 அல்லது அதற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்திலும், 40 இடங்களை 3,500 அல்லது அதற்கும் குறைவான வாக்குகள் வித்தியா சத்திலும் இழந்தது. இதனால் தற்போது மேற்கொண்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பெரிய பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.


